பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 29 வெள்ளிக்கிழமை 13.08.2021 கதிர் 281

**இது ரகசியம் அல்ல!**

'தனக்கு தனக்கென்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம்' – என்பார்கள்.

யாழ் மாநகர் முதல்வர் வீ.மணி வண்ணனின் நடவடிக்கை ஒன்றை அறியும் போது இந்த முதுமொழி தான் நினைவுக்கு வருகின்றது.

தாம் எதிரணியில் பக்கம்02

# மிக ஆபத்தான கட்டத்தில் நாடு; ஒரே நாளில் 156 பேர் உயிரிழப்பு

## 4 நாள்களில் 509 பேரைக் காவுகொண்டது கொரோனா



இலங்கையில் நாளாந்த கொரோனா மரணங்கள் உச்சமடைந்து செல்கின்றன. நேற்றுமுன்தினம் 156 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதுவே நாளொன்றில் அதிகப்படியான கொரோனா மரண எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கடந்த நான்கு நாட்களில் (ஓகஸ்ட் 08, 09, 10, 11) மாத்திரம் 509 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். 2

## 3 ஆயிரத்தை நேற்று தாண்டியது நாளாந்தத் தொற்றாளர் தொகை

### இதுவரை 3 இலட்சத்து 45 ஆயிரத்து 118 பேர் பாதிப்பு

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 39 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 45 ஆயிரத்து 118 ஆக 2

## அடுத்த 2 வாரங்களில் டெல்டா மேலும் தீவிரம்

### வைத்தியர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

கொரோனா வைரஸின் திரிபு வைரஸான டெல்டாவின் தாக்கம் அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கையில் மேலும் தீவிரமடையும்.

– இவ்வாறு ஸ்ரீ ஜயவர்தனபுர 2

## மீனவர் ஒருவர் மாயம்

(ந.லோகதயாளன்)

மன்னார் மூன்றாம் பிட்டியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றவர்களது படகு மூழ்கியதில் அதில் பயணித்த இருவர் காப்பாற்றப்பட்ட போதும் ஒருவர் காணாமல்போயுள்ளார். 2

## கொழும்பில் ஆசிரியர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

### பல தொழிற்சங்கங்கள் நேரடி ஆதரவு




அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் 2






## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்த போது முழுமூச்சாக எதிர்த்ததை இப்போது தாம் முதல்வரானதும் அதையே அவர் முன்னின்று மேற்கொள்வதைப் பார்க்கும் போது சிரிப்புத்தான் வருகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராக இ.ஆனோல்ட் இருந்த சமயம் சபை எல்லைப் பரப்பிற்குள் ஈடொற் நிறுவனத்திற்கு ஸ்மார்ட் போல் கம்பம் நடுவதற்கு அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு எதிராக மணிவண்ணனும் அப்போது அவர் இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் மாநகர சபையில் அந்த முயற்சிக்கு எதிராக பெரும் எடுப்பில் கிளர்ந்தனர். இந்தக் கம்பம் நாட்டுவது ஆபத்தானது எனப் போர்க்கொடி தூக்கினர். இது இரகசிய உடன்பாடு ஒன்றின் பின்னணி கொண்டது என்று குற்றம் சுமத்தவும் அவர்கள் தவறவில்லை.

தற்போதைய முதல்வர் வீ.மணிவண்ணன் இந்தக் கம்பங்கள் நடுவதற்கு எதிராக நீதிமன்றத்துக்குச் சென்றார் வழக்காடினார். ஆனால் இது அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று அன்றே நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் ஆனோல்ட் பதவி இழந்தார். மணிவண்ணன் அரியணை ஏறினார்.

தற்போது அதே நிறுவனத்திற்கு அதே கம்பத்திற்கான அனுமதிக்கு நேற்றைய நிதிக் குழுவில் முதல்வர் மணிவண்ணனே முன்மொழிந்தார்.

இதன்போது அந்த கம்பத்திலே 5ஜி அலைக் கற்றை வராது எனவும், தேவைப்பட்டால் மாநகர சபை கூறும் இடத்திற்கு அந்த கம்பங்களை நகர்த்த இந்த நிறுவனம் ஒப்புக்கொள்கின்றது எனவும் உப்புச் சப்பற்ற காரணத்தை நியாயமாகக் கூறித் தமது இப்போதைய குத்துக்கரண மாற்றத்தை நியாயப்படுத்த அவர் முயன்றுள்ளார்.

இந்தக் காரணங்களைத்தான் முன்னாள் முதல்வர் ஆனோல்ட்டும் கூறியிருந்தார்.

இன்றைய முதல்வரின் இப்போதைய நடவடிக்கை அன்றைய முதல்வரை மேற்படி குற்றச்சாட்டில் இருந்து விடுவித்துள்ளது.

– மின்னல் –

## கொழும்பில் ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், ஆசிரியர் சேவை சங்கம், அதிபர் சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களும் பங்கேற்றுள்ளன.

நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் வரை சத்தியாக்கிரகத்தைக் கைவிட மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## அடுத்த 2 வாரங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியமானது உணவா? அல்லது ஒட்சிசனா? என்பது தொடர்பில் அரசு தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக அடுத்த இரண்டு – மூன்று வாரங்கள் மிகவும் தீர்மானமிக்கவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

5 விநாடிகள் முகக்கவசம் அணியாமல் இருந்தால்கூட நமக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது என்றும், இது பரவாமல் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

---

## மீனவர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மூவரே இவ்வாறு மன்னாரில் தங்கி நின்று கடற்றொழில் புரிந்து வந்துள்ளனர். இதில் இருவர் வடமராட்சியையும், ஒருவர் குருநகரையும் சேர்ந்தவர்கள். மூவரும் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குப் புறப்பட்ட நிலையில் படகு நடுக்கடலில் மூழ்கியுள்ளது. படகு மூழ்கிய நிலையில் மூவரும் கடலில் குதித்து நீந்தியுள்ளனர்.

இவ்வாறு கடலில் குதித்த மூவரில் இருவர் கடற்படையினரின் முகாம் பகுதி நோக்கி நீந்திய சமயம் கடற்படையினர் அவதானித்து கரைசேர்த்துள்ளனர். இருந்தபோதும் குருநகரைச் சேர்ந்த மீனவர் இதுவரை கரை சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அரசுடன் நிபந்தனையுடன் பேச்சு தமிழ்க் கூட்டமைப்பினர் தயாராம்

## செல்வம் எம்.பி. கூறுகின்றார்

(மன்னார் நிருபர்)

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம்பெற வேண்டுமாக இருந்தால் நிபந்தனையின் அடிப்படையில், ஒரு நல்லெண்ண முயற்சியாக அது அமைய வேண்டும்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம்பெறவுள்ளதாக அண்மைக்காலமாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுடன் பேச்சு மேற்கொள்வதற்கு பின்னிற்கப்போவதில்லை. ஆனால், கடந்த கால அனுபவத்தை வைத்துக்கொண்டு, அரசு எங்களுடன் பேசுவதற்கு ஒரு நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை விதிப்பது நன்றாக அமையும்.

அந்தவகையில் இன்று ஐ.நா.தீர்மானங்கள் குறிப்பாக வடக்கு – கிழக்கில் நடைபெறுகின்ற நில அபகரிப்பு, மக்களின் அன்றாட வாழ்க்கை மிக மோசமான நிலை காணப்படும் நிலையில்,காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. ஒவ்வொரு திணைக்களத்தினூடாகவும் எமது நிலங்கள் பறிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நினைக்கும் அரசு முதன் முறையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கின்றபோது நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை செய்யவேண்டும்என்றஎதிர்பார்ப்புஉள்ளது.

மாகாண சபை முறைமையை இருக்கிற அதிகாரங்களுடன் செயற்படுவதற்கான ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும். நில அபகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. அபகரித்த நிலங்களை விட்டுக் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

அரசு பேச்சுக்கு அழைக்கின்றபோது நாங்கள் பேசத் தயாராக இருக்கிறோம் – என்றார்.

# லாப்ஸ் சமையல் எரிவாயு விலை திடீரென அதிகரிப்பு

லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 363 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் கொழும்பு விலை 1,856 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 743 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் விலை வேறு படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 3 ஆயிரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 563 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 93 ஆயிரத்து 357 ஆக உயர்வடைந்துள்ளது.

## மிக ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 620 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 156 பேரில் 87 ஆண்களும், 69 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 13 பெண்கள், 22 ஆண்கள் என 35 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 121 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில், 56 பெண்களும், 65 ஆண்களும் அடங்குகின்றனர்.







காலைக்கதிர்
Kalaikkathir

# எந்தப் பெரும்பான்மை அரசாங்கங்களுக்கும் தமிழர் பிரச்சினை தீர்ப்பதில் அக்கறையில்லை

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

எந்தவொரு பெரும்பான்மை அரசாங்கமும் இதய சுத்தியுடன் தமிழர்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எனவே அந்த நிலைதான் இந்த அரசாங்கத்திலும் தமிழர்களுக்கு நடக்கும் என்றும் இந்த அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் - தமிழர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சை நாம் இரண்டு விதமாக பார்க்கலாம். ஒன்று யுத்தத்துக்கு முன்பு இரண்டாவது யுத்தத்திற்கு பின்பு. யுத்தத்துக்கு முன்பு அரசாங்கம் பிரபாகரனுடன் பேச்சு நடத்தியது. அந்த பேச்சும் தோல்வியில்தான் முடிவடைந்தது. அதற்கு இரண்டு தரப்பினரும் காரணம். யாரும்ஒருவரைஒருவர்விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. நீ பெரியவனா? நான் பெரியவனா என்ற போட்டியில் பேச்சு தோல்வியில் முடிவடைந்து அரசாங்கம் யுத்தத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது கட்ட பேச்சு யுத்தத்தின் பின்னரானது. உண்மையிலேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமாக இருந்தால் அதனை முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ செய்திருக்க வேண்டும். இது வரை கடந்த 30 வருடங்களாக ஆட்சி செய்த எந்த ஓர் அரசாங்கமும் தமிழர் தரப்பு விடயங்களை இதய சுத்தியுடன் அணுகவில்லை என்பதே கசப்பான உண்மை. ஆனால் இந்த அரசாங்கம் நினைத்தால் இந்தத் தமிழர் பிரச்சினைக்கு சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும். காரணம் பெரும்பான்மை பலம் முக்கிய பதவிகளில் உள்ள அனைவரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள். ஓர் உணவு மேசையில் பேசித் தீர்க்க முடியும். ஆனால் அதனை செய்வார்களா? - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# தொற்றுநோயும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிறார் பாதுகாப்பு செயலர்

ஏதேனும் ஒரு தொற்று நோய், உயிரிழப்பை ஏற்படுத்துமாயின் அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

எனவே அத்தகைய பிரச்சினையைக் கையாள்வதற்கு தேவையான பகுதிகளுக்கு படையினரை அனுப்புவதே பொருத்தமான நடவடிக்கை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசி கிடைத்தவுடன் சுகாதாரத் துறையினர் போராட்டங்களை மேற்கொண்ட நிலையில் அந்த பணியை மேற்கொள்ளுமாறு படையினருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார் என்றும் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அந்த தீர்மானத்துக்கு அமையவே பாதுகாப்புப் படையினர் முன்னின்று இந்த சவால்களை வெற்றிகொள்ளும் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் 2 ஆயிரத்து 500 பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில் இராணுவத்தின் தலையீட்டை அடுத்தே ஒரு நாளைக்கு 10 லட்சம் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் அத்தகைய பணிக்காக மருத்துவத்தில் அனுபவம் வாய்ந்த மற்றும் பயிற்சி பெற்ற இராணுவ ஊழியர்களையே ஈடுபடுத்தியதாகவும் கமால் குணரத்ன தெரிவித்தார்.

# ‘ராஜபக்ஷாக்களின் கொத்தணி’ என கொவிட் வைரஸ் பரவலுக்கு பெயர்!

## சூட்டலாம் என்கிறார் சம்பிக்க ரணவக்க

கொவிட் வைரஸ் பரவலுக்கு பல்வேறு மாறுபட்ட பெயர்களை சூட்டுவது பொருத்தமற்றது. எனவே ‘ராஜபக்ஷர்களின் கொத்தணி’ என்று பெயர் சூட்டினால் பொருத்தமாக இருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றுப் பரவல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

நாட்டு மக்கள் இனிவரும் காலங்களில் ஒரு சில ஊடகங்களின் போலியான பிரசாரத்துக்கு ஏமாந்து மூடர்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்காமலிருக்க வேண்டும்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து ராஜபக்ஷர்கள் தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டதன் விளைவை நாட்டு மக்கள் இன்று எதிர் நோக்குகின்றனர்.

யுத்தத்தை வெற்றி கொண்டதைப் போன்று கொவிட் -19 வைரஸ் தாக்கத்தையும் வெற்றி கொள்ளலாம் எனக் கருதி ஆட்சியாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டதன் விளைவை இன்று நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவத்தால் இன்று நாடு பொருளாதாரம், சுகாதாரம், மக்களின் வாழ்வாதாரம் என அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜனவரி மாதமளவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் முறையான சுகாதார வழிமுறைகளைச் செயற்படுத்தாமல் தடுப்பூசி செலுத்தும் பணிகளைத் துரிதப் படுத்துகின்றது.

மிகுதியாகியுள்ள நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் ஊடக கண்காட்சியை நடத்தும் கொவிட்-19 வைரஸ் ஒழிப்பு செயலணியை நீக்கி வைத்திய நிபுணர்களின் தலைமையிலான குழுவை நியமித்து வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்தும் முறையான நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் நாட்டு மக்கள் அனைவரும் உயிரிழக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



### அமரர்
### கோணலிங்கம் கருணானந்தராசா

சிறந்த சமூக சேவையாளரும் வல்வெட்டித்துறை நகர சபையின் கோணலிங்கம் கருணானந்தராசாவின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு பருத்தித்துறை நகரசபை சார்பாக ஆறுதல் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

**தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள்,**
**பருத்தித்துறை நகரசபை.**

# சுகாதார அமைச்சரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்குமாறு கோட்டாவுக்கு அறிவுரை

சுகாதார அமைச்சரின் கோரிக்கைக்கு செவி சாய்க்குமாறு ஜே.வி.பி. கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஜே.வி.பியின் அரசியல் பீட உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் -

‘கொவிட் நோய்த் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்போரின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளும் போது தற்போதைய கொவிட் தடுப்பு செயலணியின் நடவடிக்கைகள் தொடர்பாக எந்த வகையிலும் திருப்தி கொள்ள முடியாது.

துரதிஷ்டவசமாக கொவிட் தொற்று கட்டுப்படுத்தல் தொடர்பில் கடமையாற்றிய நிபுணர்கள் அனைவரும் ஓரம் கட்டப்பட்டனர். கொவிட் நான்காம் அலை தாக்கும் போது ஜனாதிபதிக்கு எஞ்சியிருப்பது இராணுவத் தளபதியும், புலனாய்வுப் பிரிவு பிரதானியும் மட்டுமே யாகும். இந்த நாட்டின் நிபுணத்துவ மருத்துவர்கள் கூறுகின்றமையை உங்களால் கேட்க முடியாவிட்டால் தயவு செய்து சுகாதார அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் கோரிக்கைகளுக்கேனும் செவி சாய்க்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீண்டும் இருண்ட யுகம்

**அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஒரு விடயத்தைப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தி அம்பலப்படுத்தினார்.**

**மீண்டும் இருண்ட யுக ஆட்சியை ஏற்படுத்த அரசு முயல்வதாக அவர் கூறினார்.**

**சீருடையில் இல்லாத பொலிஸார் ஆள் கடத்தலில் ஈடுபடுகின்றார்கள். மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களைப் பலவந்தமாக அள்ளிச் செல்கின்றார்கள். பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகள் கடத்தப்படுகின்றார்கள். பொலிஸாருக்கென உத்தியோகபூர்வ சீருடை இருக்கும் போது அதனைத் தவிரத்து அவர்கள் சிவிலுடையில் ஆள்களை வெள்ளை வானில் கடத்துகின்றார்கள்.**

**இது 2015 இற்கு முந்திய இருண்ட யுக ஆட்சியை நினைவூட்டுகின்றது என்று சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.**

***“நீங்கள் வெள்ளை வான் கலாசாரத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவோம் என்று மக்களை அச்சுறுத்துகின்றீர்கள். அதனால்தான் சீருடை இருக்கத்தக்கதாக சிவிலுடையில் – வெள்ளை வானில் – பொலிஸார் வந்து ஆள்களைக் கைது என்ற பெயரில் கடத்தும் சட்ட விரோதச் செயல்களை முன்னெடுக்க அனுமதித்துப் பார்த்திருக்கின்றீர்கள்.”*** **– என்று குற்றம் சுமத்தியிருக்கின்றார் சுமந்திரன்.**

**சட்டத்தின் ஆட்சி செத்துவிட்டது. நாட்டை உலுப்பும் பேரிடரான கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு என்ற பெயரில் பல ஒழுங்குவிதிகள், கட்டுப்பாடுகள், நடைமுறைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் அவை எவையும் சட்ட ரீதியானவை அல்ல. அதற்கான சட்டம் எதுவும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை என்று சுமந்திரன் நாடாளுமன்றத்திலேயே சுட்டிக்காட்டினார்.**

**கொவிட் தொற்று ஒரு பேரிடர். அதனை எதிர்கொண்டு, முகம் கொடுத்துச் சமாளிப்பதாயின் அரசு அறிவிக்கும் விதிமுறைகள் யாவற்றையும் பின்பற்றி ஒழுக வேண்டும் என்ற பொறுப்புணர்வு மக்களுக்கு உண்டு. அதனால் அரசு அறிவிக்கும் விதிமுறைகள், கட்டுப்பாடுகளை அவை சட்ட ரீதியானவையா, சட்ட வலுவானவையா என்பவை எதையும் நோக்காமல் – அந்த விதிமுறைகளை சவாலுக்கு உட்படுத்தாமல் – பொதுமக்கள் அவற்றைப் பின்பற்றுகின்றார்கள். கைக் கொள்கின்றார்கள்.**

**சட்டம் இல்லாத ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு பொது மக்களின் இந்தப் பொறுப்புணர்வைத் தந்திரமாகப் பயன்படுத்துகின்றது அரசு என்பது சுமந்திரனின் குற்றச்சாட்டாக உள்ளது.**

**அதுதான் உண்மையும் கூட.**

**கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் தவறும் சட்டத்தின் ஆட்சி பிற விடயங்களிலும் இப்போது கட்டவிழத் தொடங்கியிருக்கின்றது.**

**சிவில் உடையில் வந்த பொலிஸாரால் ஆள்கள் கடத்தப்படுவதும் கூட இந்தப் போக்கின் ஆரம்பம்தான்.**

**மீண்டும் இருண்ட யுகம் கட்டவிழப் போகின்றதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வு ஒன்று நேற்று விடிகாலை கொழும்பு மவுண்ட்லவேனியா பகுதியில் நடந்திருக்கின்றது.**

**‘தமிழன்’ பத்திரிகையின் ஆசிரியர் சிவராஜாவின் வீடு அமைந்துள்ள மவுண்ட்லவேனியா தொடர்மாடிப் பகுதிக்கு விடிகாலை இரண்டரை மணிக்கு இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் சென்றிருக்கின்றனர். தங்களைப் புலனாய்வுத்துறையினர் என்று கூறியிருக்கின்றனர். ஆசிரியர் சிவராஜாவை விசாரிக்க வேண்டும், கதவைத் திறக்கும்படி வாசலில் அட்டகாசம் செய்திருக்கின்றனர். ஆனால் தொடர்மாடிக் காவலர் மறுத்து விட்டார். என்னவென்றாலும் காலையில் சீருடைப் பொலிஸாருடன் வாருங்கள் என்று கறாராகப் பேசியிருக்கின்றார்.**

**வந்த இருவரும் சற்று நேரம் அப்பகுதியில் இழுபறிப்பட்டு விட்டுப் போயிருக்கின்றார்கள்.**

**பத்திரிகைச் சுதந்திரம் மீண்டும் 2015 இதற்கு முந்திய நிலைக்குச் செல்கின்றது என்பதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வு இது.**

**இது தொடர்பில் பத்திரிகை ஆசிரியர் சிவராஜா பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டிருக்கின்றார்.**

**இருவரின் வருகை தொடர்பான சி.சி.ரி.வி. கமரா பதிவுகள் அப்பகுதி எங்கும் உள்ளன.**

**மனம் இருக்குமானால் 24 மணி நேரத்தில் இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை பொலிஸாரால் மடக்க முடியும். ஆனால் அவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள்.**

**ஏனெனில் பாம்பின் கால் பாம்பறியும். அதனால் விடயத்தை வாளாவிட்டு விடுவார்கள் என்பது நிச்சயம்.**

# பெரமுன பின்வரிசை எம்.பிக்களுடன் பிரதமர் மஹிந்த கலந்துரையாடல்

கொழும்பு, ஒக. 13

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்களிடம் முன்மொழிவுகளைக் கோருவதற்கான முதலாவது கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஏற்பாடு செய்த மேற்படி சந்திப்பில் கிராம, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள், தேசிய மட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் போன்ற துறைகள் தொடர்பில் பின்வரிசை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

உள்ளூர் சேதன விவசாயத்தை ஊக்குவித்தல், ஏற்றுமதி உற்பத்தியை அதிகரித்தல், தொழில்துறை மற்றும் சேவைத் துறையில் கிராமப்புற சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பாரம்பரிய தொழில்முனைவோரை மேம்படுத்துதல், சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல், மீன்வளத் துறையை விரிவுபடுத்துதல், மலர் மற்றும் அலங்கார இலை வளர்ப்பாளர்கள், விலங்கு உற்பத்தி துறை ஆகியவற்றை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பின்வரிசை உறுப்பினர்கள் இதன்போது முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சராக சேவையாற்றிய காலப்பகுதியில் அப்போது நாட்டின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் துறை சார்ந்தவர்களால் வரவு செலவுத் திட்ட முன்மொழிவைத் தயாரிக்கும் போது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டார் எனவும், அது மிகவும் வெற்றிகரமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியதால் இம்முறை வரவு செலவுத் திட்டத் தயாரிப்பிலும் முடிந்தளவு பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இதன்போது வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், கல்வி அமைச்சரும் பேராசிரியருமான ஜீ.எல்.பீரிஸ், கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இருவருக்குக் கொரோனாத் தொற்று

கொழும்பு, ஒக. 13

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் இரண்டு அலுவலக ஊழியர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் குறைந்த ஊழியர்களைக் கொண்டு நிறுவன செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நியூசிலாந்து முதலாவது உயர் ஸ்தானிகர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்





இலங்கைக்கான நியூசிலாந்து முதலாவது உயர் ஸ்தானிகர் மைக்கல் எட்வட் அபல்டன் கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாகத் தனது விருப்பத்தை அபல்டன் பிரதமரிடம் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி நாடான நியூசிலாந்து இலங்கையின் பால் உற்பத்தி துறையை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பம் மற்றும் அறிவை பகிர்ந்து கொள்ளவும் அபல்டன் விருப்பம் தெரிவித்தார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன், இதற்கு முன்னர் மேற்கொண்ட கலந்துரையாடல் தொடர்பாக நினைவுகூர்ந்த உயர் ஸ்தானிகர் விளையாட்டின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை உறுதிப்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

நட்பு நாடாக நியூசிலாந்து அரசாங்கத்துடன் எதிர்காலத்திலும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய பிரதமர், இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் என்ற ரீதியில் வெற்றிகரமாக சேவையாற்ற எட்வட் அபல்டன் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, இலங்கைக்கான நியூசிலாந்து பிரதி உயர் ஸ்தானிகர் அன்ட்ரூ ட்ரவெலர், முன்னாள் நியூசிலாந்து கொன்ஸியூலர் சேனக த சில்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் பொலிஸாரின் சமிக்கையை மீறிச் சென்றமையால் அதன் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பங்குடாவெளிச் சந்தியில் சம்பவதினமான நேற்று அதிகாலை 3 மணி அளவில் சட்டவிரோத மணல் டிராக்டரில் எடுத்துச் சென்ற போது பொலிஸார் டிராக்டரை நிறுத்த முயற்சித்த போதும் டிராக்டர் பொலிஸாரின் சமிக்கையை மீறிச் சென்ற நிலையில் பொலிஸார் அதனை துரத்திச் சென்று டிராக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையை அடுத்து அதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய துசாந்தன் என்பவரது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 42

ந.வித்தியாதரன்

எனக்கு அந்த நாள் இன்னும் நினைவு இருக்கின்றது. 1982 ஜனவரியாக இருக்கும். **First Ever Cricket Test** கிரிக்கெட் ஆட்டத்துக்கான ரூபவாஹினியின் தமிழ் வர்ணனையாளர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு எனக்கு அழைப்புக் கிடைத்திருந்தது.

அதில் என் தெரிவு உறுதி என்ற முழு நம்பிக்கை எனக்கு இருந்தது.

தினபதி, சிந்தாமணி அலுவலகத்தை விட்டுப்பிரிய நேரிடுமே என்ற மனக் கவலை கூட வந்து விட்டது என்றால் என் நம்பிக்கை எவ்வளவு தூரம் வலுவானது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்களேன்.

வெளியில் என் தோழர்களுக்கு அது பற்றிக் கூறியிருந்தேன். அலுவலகத்தில் யாருக்கும் மூச்சுக் கூட விடவில்லை. விசேடமாக என் சீனியர் ரிப்போட்டர்மாரிடம் நான் இது குறித்துப் பேசவேயில்லை.

முதலில் ஒருவருக்கும் சொல்லாமல் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோம், தெரிவானதும் அது குறித்து தினபதிக்குத் தெரிவிப்போம் என்றுதான் நினைத்தேன்.

என்னைத் தாங்கள் பிள்ளை போல வாஞ்சையுடன் அரவணைத்து, தேவையான சமயங்களில் கண்டித்து, உரிய வேளைகளில் தட்டிக் கொடுத்து, தினபதியின் பிற அலுவலர்களை விட வித்தியாசமாக என்னை வழிநடத்தும் மும்மூர்த்திகளுக்கு - சிவநாயகம் ஐயா, துணை ஆசிரியர் இரத்தினசிங்கம், செய்தியாசிரியர் கானமயில்நாதன் ஆகியோருக்கு - நேர்மையாக நடப்பதுதான் முறை என்று தோன்றியது.

பெரிய சங்கோஜத்துடன் சிவநாயகம் ஐயாவின் அறைக்குள் நுழைந்தேன். நேர்முகப் பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள்கள்தான் இருந்தன.

வழமையாக ஆசிரியரின் அறைக்குப் போனால் மிக முக்கியமான விடயத்தை, நீண்ட நேரம் பேச வேண்டியி



ருந்தால்தான் அவருக்கு முன்னால் இருக்கும் கதிரையில் அமருவோம். மற்றச் சமயங்களில் நின்று பேசி விட்டே வந்து விடுவோம். பக்க புறூவ்க்களை அங்கீகாரத்துக்காகக் கொண்டு வரும் உதவி ஆசிரியர்களில் இருந்து எல்லோரும் இப்படித்தான். ஆசிரியரின் அறைக்கு வருவதும் போவதுமாக இருப்பார்கள். வந்து நின்றபடி காரியத்தை முடித்து விட்டுப் புறப்பட்டுவிடுவர். துணை ஆசிரியர் இரத்தினசிங்கம் மட்டும்தான் ஆசிரியரின் அறைக்குள் வந்தால், எந்தக் கேட்டுக் கேள்வியும் இல்லாமல் மேசைக்கு முன்னால் இருக்கும் கதிரையில் இருந்து ஆசிரியருடன் உரையாடுவார். அது அவர்களின் பல தசாப்தகாலப் புரிதலின் விளைவு.

அன்று நான் தயங்கித் தயங்கி ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தபோது



ஆசிரியரின் பார்வை ஒரு மாதிரி இருந்தது. சற்று அந்நியம் தோற்றியது. ஆனால் வழமைக்கு மாறாக ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டே *“ஐஸே.... வாரும்.... இரும்...”* என்று கதிரையைக் காட்டினார். எனக்கு சங்கோஜமாக இருந்தது.

*“நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்துள்ளது”* என்றேன் நான். எந்த நேர்முகப் பரீட்சை என்று அவரிடம் இருந்து கேள்வி வரும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. பத்திரிகை உளவுத் துறையில் அவர் விண்ணர் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

*“நாளை மறுதினம் இன்டர்வியூ அப்படித்தானே”* என்றார் அவர். நான் வெலவெலத்துப் போனேன்.

*“உம்முடைய விண்ணப்பத்தின் பிரதியில் இருந்து உமக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்த கடிதத்தின் பிரதி வரை என் பார்வைக்கு வந்தது.”* என்றார் ஐயா.

*“நடேசபிள்ளை அண்ணனுடன் (என் அப்பா) நேற்றுமுன்தினமே தொலைபேசி எடுத்துப் பேசினேன். என்னையே சரியான ஆலோசனை கூறி வழிப்படுத்தும்படி உமது தந்தையார் கூறினார். எனக்கு அவரை ஐம்பது வருடங்களுக்கு மேல் தெரியும். அவர் தன் விருப்பத்தை - எதிர்பார்ப்பை - யார் மீதும், தன் பிள்ளைகளின் மீதும் கூட திணிக்காத மென்மையானவர். இந்த விடயத்திலும் அவர் தலையிட மாட்டார். எனினும் நீர் சட்டக்கல்லூரி கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு இங்கு (தினபதியில்) இருப்பதைத்தான் அவர் விரும்புகிறார். நீர் இன்னும் உமது தந்தையிடம் இது குறித்துப் பேசவில்லை. ஆனால் அவர் எனது தொலைபேசியை அடுத்து, ஸ்டேட் கவுன்ஸில் கமலசபேசனிடமும் தொலைபேசி எடுத்துப் பேசியிருக்கின்றார். அவரும் நீர் ஹல்ஸ்டோர்ப் வட்டத்தில் பணிபுரிவதுதான் உமது சட்டக் கல்லூரிப் படிப்புக்கு நல்லது என்று கூறினார் என்ற தகவலை உமது அப்பா என்னிடம் தெரிவித்தார்”* என்றார்.

எனக்குத் தெரியாமலேயே என் பின்புலத்தில் என்னைப் பற்றிப் பல விடயங்கள் நகர்ந்திருக்கின்றன என்பது எனக்குப் புரிந்தது.

இன்று வரை எனது இந்த முயற்சி குறித்து என்னுடன் என் தந்தையார் பேசியவரல்லர். 1979 பிற்பகுதியில் என்னைத் திருகோணமலையிலிருந்து கூட்டி வந்து ‘தினபதி’ அலுவலகத்தில் சிவநாயகம் - இரத்தினசிங்கம் இணையிடம் ஒப்புவித்தமையோடு அவர் விலகி நின்றார்.

சட்டக் கல்லூரிக்கு மிகப் பிரயத்தனமான போட்டிப் பரீட்சையில் நான் தெரிவு செய்யப்பட்ட விடயத்தை தொலைபேசி அழைப்பு எடுத்து (அப்போது நிலையான தொலைபேசிகள்தான்) நான் மகிழ்ச்சியுடன் கூறியபோது, *‘ஆ.... அப்படியா....? நல்லது!’* என்ற இரண்டொரு வார்த்தைகளுடன் பதிலை முடித்துக் கொண்டார் அவர். எங்களை - ஏன் எங்களை, யாரையுமே கூட - கடிந்து பேசாத பண்பாளர் அவர்.

ஆகவே, *“இது வேண்டாம்”* என்று இரண்டு சொற்களில் முற்றுப்புள்ளி வைத்தார் சிவநாயகம் ஐயா.

என் கனவுகள் ஒரு நிமிடத்தில் தகர்ந்து போயின என உணர்ந்தேன். ஆனால் அதன் பின்னர்தான் என்னுடன் மனம் விட்டுப் பேசினார் ஜாம்பவான். அப்போதுதான் அந்த மனிதனின் மனவிசாலம் எனக்குப் புரிந்தது.

*“உம்முடைய திறமைக்கும் உம்முடைய நேர்மையான மனநிலைக்கும் இது (தினபதி) இடமல்ல. ஆனால் இதுதான் உமது பயிற்சித்தளம். ரூபவாஹினியின் வெளிப்பூச்சைக் கண்டு எடுபட்டு விடாதீர். அரசுக்குத் தாளம் போடும் அந்த நிறுவனத்திலும் விட சிங்களவர்கள் நடத்தும் இந்த நிறுவனம் எவ்வளவோ மேல். நீர் விண்ணப்பித்த விடயத்தையே நீர் வேலைக்குச்சேர முன்னர் ஆப்பு வைப்பது போல இங்கு அனுப்பி உமக்கு குழி பறிப்பவர்கள் மத்தியில் நீர் தாக்குப்பிடிக்க மாட்டீர். அடிபட்டுப் போவீர். ஆனால் தினபதி அப்படி அல்ல. இது உமது வீடு”* என்றார் ஐயா. நான் கண்கலங்கும் நிலையில் இருந்தேன்.

அதன் பின்னர்தான் விடயத்துக்கு வந்தார் ஐயா.

*“தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக உமது நிலைப்பாட்டை உமது பேச்சு, மற்றையவர்களுடனான உரையாடல்கள், கட்டுரைகளில் இருந்து நான் புரிந்து கொண்டிருக்கிறேன். பேனாவை ஆயுதமாகப் பயன்படுத்த விரும்பும் உமது இளமைத் துடிப்பு ஒரு காலத்தில் என்னிடமுமிருந்தது. ஆனால் நான் அதில் வெற்றியடையவில்லை.*

*“உமது அமிர்தலிங்கம், சம்பந்தன் எல்லோருக்கும் பல ஆண்டுகள் முன்னர் அதே ஆவேசத்துடன்தான் நான் பெரியவர் செல்வாவோடு இணைந்தேன். (அவர் தந்தை செல்வா என்று குறிப்பிட்டார் என எனக்கு நினை வில் இல்லை) அதை சாதிக்க முடியவில்லை. எல்லாம் ஏமாற்று, புரட்டு. அதற்கு ஏதேனும் செய்தாகத்தான் வேண்டும். தினபதி அதற்கு வழி அல்ல. எனினும் தமிழ் மக்களை இன்னும் இன்னும் இந் தத் தலைவர்கள் ஏமாற்றாமல் இருக்க சில விடயங்களை - உண்மைகளை - நாம் வெளிப்படுத்துகிறோம். வெளிப்படுத்துவோம். மாற்றுவழிமுறைகள் அடுத்த தலைமுறைக்கேனும் கிட்டும். இந்தத் தலைவர்கள் மாறுவார்கள். மாற்றப்படுவார்கள். அப்போது நீங்கள் சாதிக்கலாம். அதற்கு தயாராக வேண்டும். உங்களை நீங்கள் வளர்க்க வேண்டும். அதற்கு ஆங்கில அறிவு கட்டாயம். உங்கள் தந்தையார் வாசிப்பிலும் தேடலிலும் விற்பன்னர். அமைதியாக இருக்கும் அவருக்குள் ஆழம் உண்டு. நீங்கள் ஆங்கில அறிவை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டாதமை அவருக்கு மிகப் பெரும் கவலை”* என்ற பாணியில் அவரது ‘லெக்ஸர்’ நீண்டது.

தமிழ் அரசியல் தலைவர்கள் தங்கள் சுயநல அரசியலுக்காக அடுத்த தலைமுறையையும் தமிழ் மக்களையும் நட்டாற்றில் விடப்போகின்றனர் என்ற கவலை அவர் கருத்தில் இருந்தது. அதற்காக சிங்களத் தரப்பிடம் சரணாகதி அடைய வேண்டும் என்று அவர் கூறவில்லை.

அவரது அன்றைய நீண்ட ஆலோசனையில் மூன்று விடயங்கள் என் மனதில் இன்னும் பதிந்து நிற்கின்றன.

ஒன்று - அவர் தமிழ்த் தேசிய உணர்வுகளைப் பிரதிபலித்தார். ஆனால் எந்த இடத்திலும் தமிழ்த் தேசியம் என்ற சொல்லாடலை அவர் வலியுறுத்தவில்லை. தமிழ்த் தாயகம் என்று கூடக் கூறவில்லை. தமிழர் பிரதேசம், தமிழர் உரிமைகள் தமிழரின் கல்வி, வேலைவாய்ப்பு தடுத்து நிறுத்தப்பட வேண்டிய சிங்களக் குடியேற்றங்கள் பற்றியே பேசினார். ஆனால் அது இன்று நாம் கூறும் தமிழ்த் தேசிய சிந்தனையின் இன்னொரு வடிவம்தான்.

இரண்டு - அப்போது முகிழ்ந்திருந்த இளைஞர்களின் வன்முறைப் போராட்டத்தை அவர் பேச்சில் அங்கீகரித்து எதுவும் கூறவில்லை. ஆனால் அதைத் தவறு என்று அவர் விமர்சிக்கவும் இல்லை. அவர்களின் தியாகத்தை - பற்றுறுதியை - அவர் மதித்தார். இந்த இளைஞர்கள் தமிழ்த் தலைவர்களின் தவறான - இலக்கற்ற - திட்டமிடப்படாத - ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரலற்ற - போக்கில் எடுபட்டு, வீணாகிப் போய்விடுவரோ என்ற ஆதங்கம் எதிரொலித்தது. இதன் விளைவு தமிழ்ச் சமூகத்து பேரழிவாகி விடுமோ என்ற பயம் அவருக்கு இருந்தது.

மூன்றாவது - ‘தினபதி’ மூலம் தாம் நினைப்பதை, எதிர்பார்ப்பதை சாதிக்கலாம் என்ற இலக்கு அவரிடம் இருக்கவில்லை. தமிழ்த் தலைவர்களின் பதவி ஆசையினால் தமிழ்ச் சமூகம் பலியாகுவதை மட்டும் அம்பலப்படுத்தி எச்சரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அவரிடமிருந்தது. தினபதியின் தமது எல்லை மட்டுப்படுத்தப்பட்டது வரையறைக்கப்பட்டது என்பதை அவர் கோடி காட்டினார்.

கடைசியாக அன்று நான் அவரது அறையை விட்டுப் புறப்படும்போது அவர் கூறியவை என் காதில் இன்னும் ஒலிக்கின்றன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூரானுக்கு இன்று கொடி!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் முதன்மையானது. 12ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கியது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈழமணித் திருநாட்டில் குறிப்பாக சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற யாழ்ப்பாண மண்ணின் வரலாற்றோடு – தமிழர்களின் பண்பாட்டோடு முருக வழிபாடு பிரிக்கப்பட முடியாததொன்றாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணமெங்கும் முருகப்பெருமானுக்குப் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அபிஷேகக் கந்தன் என ஆராதிக்கப்படுகின்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும், அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படுகின்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும் புகழ் பூத்தவை.

அந்த வரிசையில் அலங்காரக் கந்தன் என்ற பேருக்கேற்றாற் போல என்றும் குன்றாத அழகுடைய குமரனாக நல்லையம்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற கந்தப்பெருமானுக்கு இன்று துவஜாரோகணம். இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும் மகோற்வசம் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

நல்லூருக்கென்று தனித்துவமான சில அம்சங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதன்மையானது நல்லூரில் அமர்ந்து அருள் செய்கின்ற ஸ்ரீ சண்முகப் பெருமான். எந்தத் திசையில் இருந்து பார்த்தாலும் அழகு குன்றாத – அருளொளி வீசுகின்ற திருவுருவமாகக் காணப்படுகின்ற சண்முகர் ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு முறை எழுந்தருளியாக வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளன்றும், கந்தசஷ்டி உற்சவத்தின் நிறைவு நாளன்றும் வீதியுலா வந்து சூரனை வதம் செய்கின்ற போதிலும் எழுந்தருழுவது வழமை.

மற்றையது, நல்லூர்த் தேரடி. ஈழத்துச் சித்தர் மரபின் வழி வந்த குரு – சிஷ்ய பாரம்பரியத்தின் ஊற்றாகத் திகழ்வது இந்தத் தேரடி தான். செல்லப்பாச் சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற பெருஞ் சித்தர்கள் உலா வந்து, நடமாடிய இடம் என்ற வகையில் நல்லூர்த் தேரடி புகழ் பெறுகிறது.

மூன்றாவது, நல்லை நகர்க் காவலனாய்த் திகழும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வைரவர் தேவஸ்தானம். வணங்கிடும் அடியவர் துணை நிற்கும் பெருமை மிக்கராக இங்குள்ள வைரவப் பெருமான் போற்றப்படுகிறார்.

இக்கோயிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும், யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இருந்தது என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டே சிங்கள அரசின் பிரதிநிதியான – பிற்காலத்தில் சிறீசங்கபோதி புவனேகவாகு எனப்பெயர் கொண்டு கோட்டே அரசனான, செண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டு வரும் கட்டியத்தை ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

'சிறீமான் மஹாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சூர்யகுல வம்ஸோத்பவ சிறீ சங்க போதி புவனேகபாகு ஸமுஹா. என சமஸ்கிருதத்தில் உள்ள அந்தக் கட்டியத்தின் பகுதி ஒன்று கூறுகிறது.

*









# நல்லைக்கந்தா கொடியேற்றம் நல்விளைவை நல்கிடட்டும்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா



நல்லூரை நினைக்கையிலே
நம்யோகர் வந்திடுவார்
செல்லப்பா ஞானியுமே
சேர்ந்து வந்திடுவார்
தேரடியில் ஞானமது
பேரொளியாய் எழுந்ததுவே
நாமுமதில் கலந்துவிட
நல்லைப்பதி சென்றிடுவோம்!

நாவலரின் கால்பதிந்த
நல்லைநகர் திருப்பதியை
நாளும்பல வடியார்கள்
சீலமென எண்ணுகிறார்
வேலெடுத்து வினையறுத்த
வேலவனின் கொடியேற்றம்
காணவரப் பலவடியார்
காதலுடன் இருக்கின்றார்!

மணிஐயர் பிரசங்கம்
மண்டபத்தை நிறைத்துவிடும்
தேரடியில் நாதசுரம்
தேனாகப் பெருக்கெடுக்கும்
காவடிகள் வீதியெலாம்
கணக்கின்றி குவிந்துவிடும்
கரங்குவிக்க அடியார்கள்
கந்தன்வீதி வந்திடுவார்!

நல்லூரைத் தரிசிக்க
நாடெல்லாம் திரண்டுவரும்
நல்லூரான் கொடிகாண
எல்லையில்லா இன்பம்வரும்
வல்வினைகள் போக்குதற்கு
நல்லைநாதன் அருள்புரிவார்
எல்லோரும் தூய்மையுடன்
நல்லைக்கந்தன் அடிபணிவோம்!

பெருந்துயராய் எழுந்துவந்து
வருந்தும்படி செய்துவிடும்
பெருங்கொரோனா எனுமரக்கன்
பேரழிவைத் தடுப்பதற்கு
பேரரக்கன் துயர்களைந்த
பெருஞ்சக்தி வேலவனே
மாமயிலில் நீவிரைந்து
வந்தருள்வாய் மால்மருகா!

நல்லூரைத் தினமெண்ணி
நாமுன்னை வேண்டுகிறோம்
நாடழிக்கும் பெருநோயை
நாட்டைவிட்டு ஒழித்துவிடு
தொல்லையின்றி அடியார்கள்
உன்நினைப்பில் இருக்கின்றார்
நல்லைக்கந்தா கொடியேற்றம்
நல்விளைவை நல்கிடட்டும்!

















இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 97

அதேசமயம், சர்வதேச சட்டங்களில் விரிவுரையாளரான கலாநிதி சொர்ணராஜா, பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் கேட்டுக் கொண்டதன்படி, பிரித்தானியாவுக்கு ஶ்ரீலங்காவின் இறைமையை மீறி தமிழ் மக்களைப் பாதுகாக்கும் கடமை உண்டு என அபிப்பிராயம் தெரிவித்து அது பிரித்தானியா அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஆதாரப்படுத்தப்பட்டது. அந்த அபிப்பிராயத்தில் மூன்று இராஜதானிகளை ஒன்றாக இணைத்து, பின்னர்



மகாத்மா காந்தி

பிரித்தானியா தாங்கள் வெளியேறும்போது, தமிழர்களுக்கு எதுவித பாதுகாப்பும் இன்றி விட்டுச் சென்றால் அவர்களுக்கு நேர்ந்த பாரபட்சங்கள், கொடுமைகளைக் காட்டி அவர்கள் தங்கள் சுயநிர்ணயத்திற்கு போராடுகிறார்கள், அவர்களுக்கு அந்த உரிமை உண்டு, வன்முறையற்ற வழிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டதால், அது ஆயுதப் போராட்டமானது. அதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு என பழைய சமகால விடுதலைப் போராட்டங்களில் வன்முறை இருந்ததை உதாரணங்காட்டி தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாக கணித்து அவர்களை புறந்தள்ளக் கூடாது. பிரித்தானியா நேட்டோவோடு சேர்ந்து கோசோவா மக்களை பாதுகாத்தது போல் தமிழ் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்றும் மேலும் -

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களின் சமத்துவ உரிமை மீதான தொடர்ச்சியான மீறல் மட்டுமல்லாது தனிநிலப் பிரிவினையைக் கோரி நின்ற தமிழர்கள் மீது இலங்கைப் படையினரால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவ்வாறான ஒரு சமத்துவம் வாய்ந்த தனி நில உரிமையானது வன்முறை மூலமாக அடையப்பட முடியும்.

வன்முறைகள் பயன்படுத்தப்படின் அது பயங்கரவாதம் என சித்திரிப்பது பொருத்தமற்றதாகும். வரலாற்றினை நோக்கும் போது அமெரிக்க சுதந்திரப் போர் முதல் இன வன்முறைக்கு எதிரான மண்டேலாவின் போராட்டம் வரை, வன்முறைகள் சட்டபூர்வமான உரிமைகளை அடைவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தியினது கருத்தியலில், அதாவது வேண்டும் உரிமைகளை அடைவதற்கு சமாதான



நெல்சன் மண்டேலா

மான முறைமைகளை பின்பற்ற வேண்டும் எனும் கருத்து முன்னுரிமை பெறினும், அவ்வாறான சமாதான முறையிலான போராட்டங்கள் ஆரம்ப காலங்களில் தமிழ் தலைவர்களினால் பயன்படுத்தப்பட்டும் அவை பெரும் தோல்வியில் முடிந்தன. இவ்வாறாக அகிம்சை முறை போராட்டங்கள் தோல்வி அடைந்த பின்னரே தமிழ் இளைஞர்கள் வன்முறையினை கையிலெடுத்தனர். இவர்களது போராட்டத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவினர் என்பது குறிப்பிடத்தக்கவொன்று.

தற்போதைய நிலையானது இரண்டு தரப்பு படைக்கும் இடையிலான மோதலினால் உருவானதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்குரிய அங்கீகிக்கப்பட்ட சீருடையுடன் தனி நிலத்திற்காக சட்ட முறையாகப் போரிடுகின்றனர். பொதுமக்கள் இலங்கை அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்ட வலயங்களில் தங்கியுள்ள போதும் இலங்கைப் படைகளினால் அவர்கள் தாக்கி அழிக்கப்படுகிறார்கள். யுத்த வலயத்தில் இருந்து தப்பி வெளியில் வருபவர்கள் தடுப்பு முகாம்களில் தமிழர் என்ற ஒரு காரணத்திற்காக பரிதாபகரமான நிலையில் சிறைபிடிக்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையில் பாதுகாப்பதற்கான கடப்பாடு எழுகிறது. அத்தோடு இக்கடப்பாட்டில் ஆரம்பத்தில் கூறப்பட்ட காரணங்களால் பிரித்தானிய அரசாங்கத்



கராத் இவான்ஸ்

தின் பங்கு மிகப்பெரிய அளவில் உள்ளது. அத்தோடு இக்கடமையானது பிரித்தானிய பிரஜைகளாக உள்ள தமிழர்களின் உறவினர்களும் இப் போர்க்களங்களில் அகப்பட்டிருந்தமையால் இக்கடமை பிரித்தானிய அரசாங்கத்தின் மேல் மேலும் பாரப்படுத்தப்படுகிறது.

ஆனால் போர் முடிந்து பிரித்தானியாவுக்கான தூதுவராக டெஸ் பிறவுண் நவம்பர் 2009இல் மெல்போர்ன் வந்து புலம்பெயர் மக்களுடன் கருத்தாக்கம் செய்தபோது மனிதாபிமான முறையில் பிரித்தானியா பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காதமை பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டன. அவரோ நேட்டோ நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியமும் ஶ்ரீலங்காவின் மேல் ஆளுமை செலுத்தக்கூடியதாக இருப்பது வரிச் சலுகை விடயத்தில் என்றார். தமிழ் மக்களுக்கும் எதிராக இந்த யுத்தத்தில் நடத்தப்பட்டது இனப்படுகொலை என்ற அர்த்தத்தில் அரசியல் தீர்வுகளை அணுகும் எண்ணம் பிரித்தானியாவுக்கு இல்லை என்றும், ஒரு நீதியான, யதார்த்தமான தீர்வுக்கு பிரித்தானியா பாடுபடும் என்றும் கூறினார்.

காரத் எவான்ஸ் ஶ்ரீலங்காவின் உயர் மட்டத்து அதிகாரிகளுடன் எடுத்துக் கொண்ட விடயங்கள் பற்றி இருந்த தொடர்பாடல்களும், கலாநிதிசொர்ணராஜாவின் அபிப்பிராயமும் என்னோடு கையில் இருந்ததால் அவற்றை இந்திய அதிகாரிகளிடம் கொடுத்தேன்.

மாலை சிற்றுண்டி நேரம் அவர்களோடு இருந்த தமிழ் அதிகாரி என்னோடு பேசும்போது அவற்றை நாம் படித்தோம். அவை போல பல அபிப்பிராயங்களும் அழுத்தங்களும் எங்களோடு வருகின்றன. ஆனால் ஈழத் தமிழர்களின் புலம்பெயர் மக்கள் ஒரு புத்தக அல்லது தற்குறி அரசியல் நடத்துகிறார்கள். யதார்த்தத்தைப் பார்ப்பதும் இல்லை. ஏற்பதும் இல்லை. 1987இல் முன்னெல்லாம் இந்தியத் தூதரகங்களுக்கு முன்நின்று "இந்தியாவே காப்பாற்று" என்று வேண்டுவார்கள். அவர்கள் எல்லாம் உண்மையில் தமிழ் மக்களின் அனர்த்தங்களை உணர்ந்து வீதிகளுக்கு வந்து போராடியவர்கள். பின்னர் விடுதலைப் புலிகளின் ஏவுதலில் இந்தியாவைக் கேட்பதும் இல்லை, கேட்க விடப்படுவதும் இல்லை. தேவையானால் "இந்தியா வெளியேறு" என்று கூப்பாடு போடுவார்கள். இப்பொழுது வெளிநாடுகளில் அப்படி ஆர்ப்பாட்டம் செய்பவர்களில் அநேகமாக முழுப்பேரும் அவர்களின் முகவர்களே. விடுதலைப் புலிகளுக்காக வந்து காப்பாற்ற கேட்கும் அந்த அமெரிக்கா பிரித்தானியா, நேட்டோ நாடுகள் அதனை செய்யப் போகிறார்களா என்பதை புலம்பெயர் தமிழ் மக்கள் பார்க்கட்டும். ஆனால் வீணாக அந்த நம்பிக்கைகளை வளர்த்து மேலும் அவலங்களை இந்த மக்களுக்கு ஏற்படுத்துகிறார்கள். மக்களைப் பாதுகாக்கப் போரை தற்காலிகமாக நிறுத்துவதென்பது களத்தில் நிற்கும் இராணுவத்தையும் கோட்டாபய ராஜபக்ஷவையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தது. இந்தியா சர்வதேசத்துடன் சேர்ந்து மக்களைப் பாதுகாக்க இயலக்கூடிய முயற்சிகள் செய்கிறோம். நீங்கள் அதை யொட்டி எடுக்கிற முயற்சிகளுக்கு ஆதரவு தருகிறோம். - என்றார்.


முடிவில் நானும் சென்னை தமிழன்தான், அங்கேயே பிறந்து படித்து வளர்ந்தவன். அண்ணாவின் திராவிட நாட்டு கோரிக்கைகளுக்கு கொடி பிடித்தவன் தான். ஆனால் என்ன நடக்கிறது? இங்கு இவ்வளவு அழிவுகள் நடக்கும்போது தமிழ் நாடு முழுவதுமே ஒற்றுமையாக கிளர்ந்தெழுந்து புதுடில்லி நோக்கி ஒரு நடைபயணம் தன்னும் செய்யவில்லை. புதுடில்லிக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. அசைக்க



கலாநிதி சொர்ணராஜா

முடியவில்லை. ஆனால் மஹிந்தவின் அரசியலை பார்த்து தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியா இன்று எடுக்கும் முடிவுகளுக்கு தமிழ் மக்கள் எல்லோருமே காரணம், இந்தியாவில் தமிழ் நாட்டின் தலைவர்கள் கூட என்றார். போர் முடிந்தபின் யாருக்கு மஹிந்த விருந்து தருவார் என்றும் சிலேடையாகச் சொன்னார்.

(வளரும்...)



# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

21

- வே.வரதசுந்தரம் -

**சம்பந்தப் பாலகன்**
**பால்கேட்டு அழுதிடப்**
**பரிவு காட்டினாய்**
**ஆச்சிநீ காளி!**
**சாமகானம் பாடி**
**இராவணன் உய்ந்த**
**கோணமலைத் தாயே**
**ஆச்சிநீ காளி!**
**கவியரசன் கம்பன்**
**இராமகாதை பாடப்**
**பந்தம் பிடித்தனை**
**ஆச்சிநீ காளி!**

அம்பாள் அடியார்களை சிறையிலிருந்து கூட மீட்பாள். இவ்வற்புதத்தை அரவிந்த அடிகளின் வாழ்க்கையில் கண்டோம். அவ்வாறே பண்டுதொட்டு சைவப் பாரம்பரியம் பேணிக்காத்து வரும் இணுவில் கிராமத்திலும் அம்பாள் – அன்னை சிவகாமி – தமிழ்ப்புலவர் ஒருவரை சிறைமீட்டாள். இவர் இணுவையூர் சின்னத்தம்பி புலவர். சிறையில் வாடித்துன்புற்ற அவரை இணுவில் சிவகாமி அம்மை சிறைமீட்ட அற்புதத்தை இணுவைச் சிவமரன் அழகிய தமிழில் நமக்குத் தருகின்றார், இதோ:

'இலங்கை சிற்றரசராகவும் பாண்டியனின் மந்திரியாகவும் இருந்த காலிங்கராயன் ஆட்சியில் உத்தியோகம் பார்த்த சின்னத்தம்பி புலவர் விதியின் விளையாட்டால் செய்த சிறுதவறு காரணமாக சிறைசெல்ல நேரிட்டது. புலவர் சிறையிலே நெடுங்காலம் பெரும்துன்பத்தை அனுபவித்தார். விடிவு கிட்டவில்லை.

இறுதியில் தனது குலதெய்வமாகிய அன்னை சிவகாமியை வேண்டி பாடல்களைப் பாடினார். 'மறியற் கொச்சகம்' என்று அழைக்கப்பட்டது பதினொரு பாடல்களையுடைய அப்பாடற் தொகுதி. எட்டாவது பாடலிது:

**துப்பூட்டு மென்றது துன்னார் இறைப் படுத்தும்**
**அப்பூட்டுத் தீயவரிய சிறை யீட்டிருக்கும்**
**இப்பூட்டு நிர்ப்பூட்டோ என்சிறை நீக்கி யருள்**
**செப்பூட்டும் பொற்றாட் சிவகாம சுந்தரியே!**

இப்பாடல் பாடிமுடிக்கப் பெற்றதும், சிறைக்கதவு தானாகவே திறக்கப் பெற்றது.

இப்போது, இனனுமொரு திருகோணமலைக் காளிஆச்சி அற்புதம் காணீர். சென்ற வாரம் வாசகர் கண்ட அம்பாள் அற்புதம்போல் இது நிகழ்ந்ததும் எண்பதுகளில்தான். சங்குவேலியில்தான்.

அது இந்திய அமைதி காக்கும் படையினர் வடகிழக்கு மாகாணங்களில் பிரசன்னமாகியிருந்த காலம். ஒரு கட்டத்தில் அமைதி குலைந்தது. இங்கு மோதல், அங்கு சாவு என்று நாளாந்தம் பத்திரிகைகளில் துணுக்குறும் செய்திகள் பிரசுரமான காலமது. இதனால் நகரைவிட்டு மக்கள் அங்கும் இங்கும் பாதுகாப்புத்தேடி அலைந்த காலம். கிராமமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி கோயில்களில் அடைக்கலம் நாடியகாலம்.

முதியவர்கள் இருவர் எங்களுடன் வாழ்ந்தமையால், அவர்களுக்கு அவ்வாறான வாழ்க்கை அசௌகரியமாக இருக்குமென்பதால் எதுவரினும் வரட்டும் என்று நாம் எங்கும் செல்லாமல் எங்கள் வீட்டிலேயே இருந்தோம்.

அக்காலத்தில் அமைதி காக்கும் படையினர் பாதுகாப்புக் கருதி ஆங்காங்கே சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதுண்டு.

ஒருநாள் நாம்வாழ்ந்த சங்குவேலி கிராமத்தை காலைவேளை அவர்கள் சுற்றிவளைத்தனர். அவ்வாறான சுற்றிவளைப் பின்போது அலறல் கேட்கும், தாக்குதல், கைது என்பன இடம்பெறலாமென்ற அச்சவுணர்வு மக்களிடையே காணப்படும்.

எங்கள் கிராம சுற்றிவளைப்பின்போது அமைதிகாக்கும் படையினர் எங்கள் வீட்டிலும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். வாயிலூடாக நுழையாமல், வளவின் பின்புறவேலிகளைத் தாண்டி பாரிய சத்தம் எழுப்பியவாறு வந்தனர். அவர்களின் குரலில், நடவடிக்கைகளில் மூர்க்கம், சீற்றம் காணப்பட்டன.



அம்பாள் பக்தை பாலாம்பிகை

எங்கள் வளர்ப்புப் பிராணிகளான நாய்கள் குரைத்தன. அவர்களை விரட்டவும் முனைந்தன. இதனால் அவர்களின் சீற்றம் மேலும் அதிகரித்தது. என்னை அழைத்து வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த காரினைத்திறக்குமாறு கூறி, அதனனைத்துப் பாகங்களையும் பரபரப்புடன் துருவித் துருவிப் பார்த்தனர். என்னிடம்பல கேள்விகளைக் கேட்டனர்.

இப்படி நாம் கலங்க, பாலாம்பிகை மாமி எங்கள் வீட்டு சுவாமியறையில் அம்பாள், துர்க்கை, பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா படங்களின் முன்னால் நின்று பூஜைகள் ஆற்றினார். அதனை அறைச்சாளரம் ஊடாக அவர்கள் அவதானித்துவிட்டனர். அனைவரும் சுவாமியறை நோக்கி விரைந்தனர். இதுகண்டு பரபரப்படைந்த நான்அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

அமைதிப்படை வீரர்கள் அமைதியடைந்தனர். அவர்களிடம் நாம் கலக்கத்துடன் அவதானித்த பரபரப்பு, மூர்க்கம், சீற்றம் அக்கணமே எங்கோ மறைந்து போயிற்று. தத்தம் பாதணிகளைக் கழற்றினர். சுவாமியறையுட் புகுந்தனர். கைகட்டியவாறு மௌனமாக நின்று மாமி ஆற்றிய பூஜையில் பயபக்தியுடன் பங்குபற்றினர். கற்பூரம் பற்றவைத்து, மாமி பஞ்சதீபங் காட்ட கைகூப்பிக் கடவுளரை வணங்கினர். பஞ்சதீபம் மேலே தம் கரம்காட்டிப் பின்னதனைத் தம்கண்களில் ஒற்றிக்கொண்டனர். மாமியிடம் திருநீறுபெற்று விடைபெற்றனர். முகத்தில் கனிவுடன் தமது மொழியில் ஏதேதோ கூறிச்சென்றனர்.

நம்பமுடியவில்லை. இக்காட்சியை என்னால் நம்பமுடியவில்லை. இது கனவா! இல்லை நனவா! எந்தன் உடலைக் கிள்ளிப்பார்த்தேன்.

காளி ஆச்சி பிரார்த்தனை, தீப ஆரத்தி மகிமையை பாலாம்பிகை மாமி தத்ரூபமாக தன்குடும்பத்தார்க்கு, தன்மக்கட்கு, உற்றார் உறவினர்க்கு, தன்வழித்தோன்றல்களுக்கு மட்டுமன்றி அம்பாள் பக்தர்களுக்கு வெறும் உபந்நியாசம், பிரசங்கத்தாலன்றி தன்செயற்பாட்டால் உணர்த்தி விட்டு எம்மைப் பிரிந்துவிட்டார்.

காளி ஆச்சியைத் தினமும் வழிபடுவோம்! உய்திபெறுவோம்!

## தமிழ் ஊடகத்துறையின் ............

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"அரிதாரம் பூசிக் கொண்டு எழுதித் தந்ததை திரையில் வாசிக்கும் அற்பத்தனத்தை விட்டு விட்டு, உங்கள் பேனாவால் சமூகத்தை, இனத்தை வழி நடத்தும் உயரிய சிந்தனையோடு பணியாற்றத் தயாராகுங்கள். அதற்கு வழியும், இடமும், வாய்ப்பும் உம்மைத் தேடி வரும்."* என்று தீர்க்கதரிசனம் கூறினார் அவர்.

நிர்மலமான மனதுடன், உள்ளத் தெளிவுடன் ஆசிரியர் அறையிலிருந்து புறப்பட்டேன்.

அப்போது ஒரு விடயம் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. அரசின் ரூபாவாஹினியும் அல்ல, குணசேனா கம்பனியின் தினபதியும் அல்ல எனது பணியிடம் என்பது.

அடுத்த ஒன்றரை வருடத்தில் நான் தினபதியை விட்டு வெளியேறினேன். ஆசி கூறி அனுப்பி வைத்தார் சிவநாயகம் ஐயா.

எனினும் அதற்குப் பின்னரும் சுமார் பதினைந்து ஆண்டுகள் ஏதேனும் ஒரு வழியில் என்னைத் தனது கண்காணிப்பு வலையில் வைத்திருந்தார் சிவநாயகம் ஐயா.

'உதயன்' தொடங்கும் கால கட்டத்தில் பல தடவைகள் 'தினபதி' முன்னாள் ஊழியனாக அவர் அலுவலகத்துக்குள் போயிருந்து அவருடனும் இரத்தினசிங்கத்துடனும் மணிக் கணக்கில் பேசியிருக்கிறேன் – அதே குரு, சிஷ்ய உரிமையுடன்.

1982 இல் நான் இன்னும் படிக்க நிறைய உண்டு என்று எனக்கு கண்டிப்புடன் ஆலோசனை கூறிய அந்த மாமனிதர், எனக்கு ஒரு சான்றிதழ் தந்தார் – என் தந்தையைத் தேடிச் சென்று.

கையால் எழுதிய சான்றிதழ் அல்ல அது. அதன் விவரம் நாளை தருவேன்.

கடைசியில் ஒரு குறிப்பு. நான் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குச் செல்லாவிட்டாலும் அந்த **First Ever Cricket Test** நேர்முக வர்ணனை தமிழில் நடந்த போது நானும் பக்கத்தில் இருந்தேன். அந்த இடத் துக்கு – நேர்முக வர்ணனைக்குத் தெரிவான எழில்வேந்தன் போன்றோர் வர்ணணை செய்த போது நான் 'தினபதி' விளையாட்டுத்துறைச் செய்தியாளனாக அங்கு பிரசன்னமாகி அன்றன்று நடந்தவற்றை விவரமாக விமர்சித்து எழுதினேன். அவை என்னுடைய பெயரில் 'தினபதி', 'சிந்தாமணியில் பிரசுரமாகின.

என்றாலும் அரிதாரம் பூசிக் கொண்டு சின்னத் திரையில் அடிக்கடி தோன்றவில்லையே என்ற மன ஆதங்கம் கொஞ்சக் காலம் என் மனதில் இருந்தது உண்மைதான். ஆனாலும் பிற்காலத்தின் நிஜம் – யதார்த்தம் – எனக்குப் புரிய அந்த விருப்பே அடிபட்டுப் போய்விட்டது.

(வளரும்)

## இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் சபாநாயகர் மஹிந்தவை சந்தித்தார்





இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தீ தான் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தார்.

இந்த சந்திப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் இ.போ.ச. பஸ் கவிழ்ந்து விபத்து; 20 பேர் காயம்; ஐவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

காரைநகரிலிருந்து நேற்று காலை யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் கல்லுண்டாய் வீட்டுத்திட்டப் பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 20 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் ஐவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காரைநகர் சாலைக்குச் சொந்தமான குறித்த இ.போ.ச. பஸ், தனியார் பஸ் ஒன்றை முந்த முற்பட்டபோதே கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## யாழில் வர்த்தக நிலையம் மீது வாள்வெட்டுக் குழு வன்முறை

### பெற்றோல் குண்டு வீச்சு


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கல்வியங்காடு ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி மீது நேற்று மாலை 6.41 மணியளவில் இனந்தெரியாத வாள்வெட்டு கும்பலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி மீது வாள்வெட்டு கும்பல் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தியதோடு அங்காடி கண்ணாடிகள் வாளால் அடித்து நொருக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக பல்பொருள் அங்காடி உரிமையாளரால் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## கோப்பாய் சந்தியில் விபத்து; சமிக்ஞை விளக்குகள் சேதம்

### சாரதி ஒருவர் காயம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனமும் கோப்பாயில் இருந்து கைதடி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சமிக்ஞை விளக்கு சேதமடைந்து தொலைத்தொடர்பு கம்பம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு கோப்பாய் சந்தி பகுதியில் இடம்பெற்றது.

சமிக்ஞை இலக்கங்கள் ஒளிர்ந்து கடைசி மூன்று செக்கன்கள் முடிவடையும் நிலையில் மற்றைய பகுதிக்கு செல்வதற்காக வேகமாகப் பயணித்த இரண்டு கனரக வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று எதிர்பாராத விதமாக மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் வாகனத்தின் சாரதி ஒருவர் காயமடைந்தார்.

குறித்த சம்பவத்தில் சமிக்ஞை விளக்குப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரும் மயிரிழையில் உயிர் தப்பியதுடன் இவற்றின் காரணமாக போக்குவரத்தும் சிறிது நேரம் தடைபட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சமையல் எரிவாயு உற்பத்தி; அதிரடி முடிவெடுத்தது அரசு

மக்களுக்கு நியாயமான விலையில் சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்து வழங்குவதற்கு புதியதொரு நிறுவனத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டுக்குத் தேவையான சமையல் எரிவாயுவில் 5 சதவீதம் மாத்திரமே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்து அரசுக்குச் சொந்தமான லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்துக்கும் தனியார் லாப்ஸ் காஸ் நிறுவனத்துக்கும் விநியோகிப்பதற்காக வழங்கி வருகின்றது.

வலுசக்தி அமைச்சர் இதற்கான முதற்கட்ட நடவடிக்கையை, தினமொன்றுக்கு ஒரு லட்சம் பீப்பாய் உற்பத்தித் திறன் கொண்டதாக சப்புகஸ்கந்தையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பில் ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளார்.

இந்தப் புதிய சுத்திகரிப்பு நிலையக் கட்டுமாணம் பூர்த்தியானதும் நாட்டின் 20 சதவீத சமையல் எரிவாயு தேவையை உற்பத்தி செய்ய முடியும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உட்பட 4 உறுப்பினர்களுக்கு கொரோனா உறுதி

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான உறுப்பினர்களின் எண்ணிக்கை 04 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்குக் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரி சோதனையில் தவிசாளர் உட்பட்ட மேலும் 03 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## எழுமாற்று அன்டிஜன் பரிசோதனைகளில் தென்மராட்சியில் 17 பேருக்கு கொரோனா

யாழ்., தென்மராட்சியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் செயற்படும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் கைதடிப் பணிமனையில் பணியாற் றும் ஊழியர்கள் இருவருக்கும், கைதடியில் செயற்படும் சமூக சேவைத் திணைக்களத்தின் உத்தி யோகத்தர்கள் மூன்று பேருக்கும், கொடிகாமத்தில் மக்கள் வங்கி ஊழியர் மற்றும் பொதுமக்கள் ஐவருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும், மிருசுவில் பகுதியில் ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் தாய், மகள் உள்ளிட்ட இருவருக்கும், வரணி பகுதியில் ஒருவருக்கும், மட்டுவில் பகுதியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் நேற்று 104 பேருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊழியருக்குக் கொரோனாத் தொற்று; கொடிகாமம் மக்கள் வங்கி முடக்கம்!

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 13

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையின் ஊழியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையின்போதே குறித்த ஊழியர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து கொடிகாமம் மக்கள் வங்கி யின் செயற்பாடுகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து குறித்த வங்கியில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



# முடக்க நிலை அறிவிக்கப்படாதமைக்கும் மகனின் திருமணத்திற்கும் தொடர்பில்லை!

## அஜித் நிவாட் கப்ரால் கூறுகிறார்



முடக்க நிலை அறிவிக்கப்படாமைக்கும் தனது மகனின் திருமண நிகழ்விற்கும் தொடர்பு கிடையாது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தனது மகனின் திருமண நிகழ்வு நடத்தப்படுவதன் காரணமாகவே இன்னமும் நாடு முடக்கப்படவில்லை எனவும் திருமணத்தின் பின்னர் நாடு முடக்கப்படும் எனவும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் செய்திகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் முற்றிலும் ஒரு வதந்தி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் முகநூல் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்று நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க 16 ஆயுர்வேத மருந்துகள் பரிந்துரை

கொவிட் தொற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க மருந்துகளாகப் பயன்படுத்த 16 ஆயுர்வேத மருந்துகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேத ஆணையாளர் வைத்தியர் தம்மிக அபேகுணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில், 'சுவ தரணி' உட்பட இரண்டு மருந்துகள் ஆயுர்வேத துறையால் அங்கீகரிக்கப்பட்டன என அவர் கூறினார்.

அதைத் தொடர்ந்து, 100 ஆயுர்வேத குறிப்புகள், பல இடங்களில் இருந்தும் அனுப்பப்பட்டன. கடைசியாக, கொவிட் வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இத்தகைய 14 மருந்துகளுக்கு ஒப்புதல் அளிக்க முடிவு செய்யப்பட்டது என்று அவர் தெரிவித்தார். இவை அனைத்தும் இயற்கையான மருந்துகள், பக்கவிளைவுகளால் எவரும் பாதிக்கப்பட மாட்டார்கள், எவரும் எந்தப் பயமும் சந்தேகமும் இல்லாமல் அவற்றைப் பயன்படுத்தலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மருந்துகளை பிராந்திய ஆயுர்வேத அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

# மக்களை ஆபத்தில் தள்ளும் அரசு எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

நாட்டின் தற்போதைய நிலைமையில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி ஒரு முடிவை எட்டவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இருப்பினும் தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை என்றும் இத்தகைய நடவடிக்கை அரசாங்கத்தின் பிடிவாத அணுகுமுறையைத் தெளிவாகக் காட்டுகின்றது என்றும் கூறினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அப்பாவி மக்களின் வாழ்க்கையில் அரசாங்கம் விளையாடுகிறது என்றும் குற்றம் சாட்டினார்.

சந்தையில் எரிவாயு மற்றும் பால் மா போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குக் கடுமையான பற்றாக்குறை இருப்பதாகவும், எரிபொருள் பற்றாக்குறை இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் எரிபொருளை இறக்குமதி செய்வதில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் இலங்கை கடுமையான எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

மேலும் கொரோனா பரவல் உச்சத்தை எட்டியுள்ள நேரத்தில், தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்றும் படிப்படியாகவும் வெற்றிகரமாகவும் மக்களை பெரும் பேரிடரை நோக்கி அரசு தள்ளுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

# அலுவலக அடையாள அட்டை இல்லாதோர் இனி ரயிலில் பயணிக்க முடியாதாம்!

அலுவலக அடையாள அட்டை அல்லது உரிய ஆவணங்கள் இல்லாதவர்கள் மாகாணங்களுக்கு இடையேயான ரயில் சேவைகளைப் பயன்படுத்த முடியாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த ஆவணங்களை எந்த நேரத்திலும் பரிசோதனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் வேலைக்கு செல்வோருக்கான ரயில் பயணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பி.சி.ஆர்., அன்டிஜன் சோதனைகளுக்கு அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது



அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் அன்டிஜன் பரிசோதனைக்கான அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி பி.சி.ஆர். பரிசோதனைக்கு 6 ஆயிரத்து 500 ரூபாவும் அன்டிஜன் பரிசோதனைக்கு 2 ஆயிரம் ரூபாவும் அதிகபட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.



01

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி ஆர்வமுடைய அனைவரும் பங்கு பற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. ஓங்காரப் பொருளாக விளங்குபவர் யார்?**

........................................................................................

**2. யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதியவர் யார்?**

........................................................................................

**3. நல்லூர் கந்த சுவாமி கோவிலில் அதிகாலையில் பாடப்படும் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி யை யாத்தவர் யார்?**

........................................................................................

**4. நல்லூர் ஆலய பெருந்திருவிழாவின் 22 ஆம் நாளைய விசேட உற்சவம் எது?**

........................................................................................

**5. இந்து ஆலயங்களில் துவஜாரோகணம் என்பதன் பொருளைக் குறிக்கும் திருவிழா எது?**

........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

01

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..........................................
கையொப்பம்

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.



**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2021 இல் வெளியிடப்பெற்றது.